தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(1995 - 96)

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

முப்பத்திரெண்டாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை-600 009.

53-440—A

பொருளடக்கம்.

பக்கங்கள்

குழுவின் அமைப்பு iii

அறிக்கை

(i) முகவுரை v

(ii) குழுவின் கூட்டங்கள் v

(iii) குழுவின் ஆய்வுப் பயணம் v

(iv) குழுவின் பரிந்துரை vi

(v) பொதுக் குறிப்புரைகள் vi

இணைப்புகள்

1. 1995-96 ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப்பட்டதாக, படித்துப் பதிவு செய்யப்பட்டதாக கருதப் பெற்ற உறுதிமொழிகளின் துறை வாரியான விவரம் .. .. 1—14

2. அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற்றப் பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டுவாரியான பட்டியல் .. 15

3. நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த துறைவாரியான மற்றும் ஆண்டுவாரியான பட்டியல் .. .. 16—17

4. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் 18

5. நிறைவேற்றப் பெற்ற / படித்துப் பதிவு செய்யப்பெற்ற உறுதிமொழிகளின் சதவிதம் 19

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1995-96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு.

(20—6—1995 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது.)

தலைவர் :

1. திரு. ஆர். திங்காரம்

உறுப்பினர்கள் :

2. திரு. ஆ. சுப்புரத்தினம்
3. திரு. சிங்கை கோவிந்தராசு
4. திரு. க. பழனிசாமி
5. திரு. எஸ். ஆர். சிவபதி
6. திரு. ஏ. டி. செல்லச்சாமி
7. திரு. ஜெ. பன்னீர்செல்வம்
8. திரு. வே. பெரியசாமி
9. டாக்டர் ச. சுந்தரராஜ்
10. திரு. ஆ. பாலையா
11. திரு. எ. தெய்வநாயகம்
12. திரு. எஸ். எஸ். ராமசுப்பு

செயலகம் :

திரு. செ. சு. ஜானகிரமன், செயலாளர்.

திரு. வெ. இராசாராமன், இணைச் செயலாளர்

திருமதி நா. துளசிபாய், சார்புச் செயலாளர்.

அரசு உறுதிமொழிக் குழு

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

மூப்பத்திரெண்டாவது அறிக்கை.

பெறுநர் :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை.

(i) முகவுரை

1. 1995-96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்ட மன்றப் பேரவை) மூப்பத்திரெண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 248 (1)-ஆம் விதியின் கீழ் 1995-96 ஆம் ஆண்டிற்கான குழு, 1995 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20ஆம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பெற்றது.

(ii) குழுவின் கூட்டங்கள்.

3. குழு, 1995-96 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாளன்று சென்னையில் கூடிய தனது முதல் கூட்டத்தில் ஏற்கெனவே நிலுவையாக உள்ள உறுதிமொழிகள் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆய்வு செய்யலாம் என முடிவெடுக்கப் பட்டது. மேலும், 1995 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் நாள் முதல் மே திங்கள் 4 ஆம் நாள் வரை நடைபெற்ற சட்டமன்றப் பேரவைத் தொடரின் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து எடுக்கப்பெற்ற உறுதிமொழிகளுக்கு அரசு உறுதிமொழிக் குழு ஒப்புதல் அளித்தது.

4. குழு, சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரம் இணைப்பு 4-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

5. பேரவையில் அமைச்சர்களால் கொடுக்கப்பெற்ற, ஏற்கெனவே நிலுவையாக உள்ள உறுதிமொழிகள் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை களை குழு மேற்படி கூட்டங்களில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டது. நிறைவேற்றப் பெறாத உறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட அதிகாரிகளை நேரில் கலந்தாலோசித்து விவரங்களை சேகரித்தது. மேலும், செயலகத்தின் பல்வேறு துறை களை சார்ந்த அரசு செயலாளர்கள் மற்றும் இதர அதிகாரிகளை சென்னையில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்தாலோசித்து நேரடித் தகவல்களைக் குழு நிரட்டி யது. இவ்வகையில் குழு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசுத் துறை செயலாளர்களுடன் அனைத்து உறுதிமொழிகள் குறித்து கலந்துரையாடியது. நிறைவேற்றப் பெற்றனவாக அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகக் குழு வினால் கருதப்பட்ட உறுதிமொழிகள் பற்றிய விவரங்கள் இணைப்பு-1ல் கொடுக்கப் பெற்றுள்ளன.

6. இவ்வறிக்கையில் நீலகிரி, கோவை, பெரியார், திண்டுக்கல்-அண்ணா, மதுரை, காமராசர், இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்கள் குறித்த உறுதிமொழிகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதர மாவட்டங்கள் பற்றிய அறிக்கைகள் பேரவைக்குத் தனியே அளிக்கப்படுகின்றன.

(iii) குழுவின் ஆய்வுப் பயணம்.

7. உறுதிமொழி எண் 278/91—3வது பால் பெருக்கத் திட்டத்தின் கீழ் புதிய பால் பண்ணை அமைப்பது குறித்து கருத்தறிய குழு நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை 25—9—1995 அன்று பார்வையிட்டது. 1962-64 ஆம் ஆண்டில் 10,000 லிட்டர் கொள்திறன் கொண்ட பால் பதப்படுத்தும் யந்திரம் அமைக்கப்பட்டது. உதகை-குன்னூர் சாலையில் அமைந்துள்ள இந்தப் புதிய பால் பண்ணை இந்தியாவிலேயே சிறந்த தரமான பலாடை கட்டி தயாரிப்புக்காக கட்டப் பட்டது. நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் பதம் செய்யப்படும் அளவுக்கு கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. நமது நாட்டில் பால் உற்பத்தியில் தன்னிறைவு ஏற் படுத்தும் வண்ணம் பால் பெருக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு இயந்திர தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் கிராமப்புறகளில் புதிய சங்கங்கள் அமைப்பதற்கும், அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும் நிதி உதவி பெற்றுப் பட்டுள்ளது.

8. உறுதிமொழி எண் 246/92—மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையில் தற்போது வெண்புகை, கரி, மண் புகையால் மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து குழு கருத்தறிந்தது. நிறுவனம் புகையை கட்டுப்படுத்த சாதனத்தைப் பொருத்தி புகை அளவை கட்டுப்படுத்தியுள்ளது. இருப்பினும், லாரி போக்குவரத்து மற்றும் மூலப் பொருட்களை பயன்படுத்துவது போன்றவற்றில் சில குறைகள் வருவது கண்டறியப்பட்டுள்ளது. அதைக் கட்டுப்படுத்த மாசுக் கட்டுப்பாடு சாதனம் தனியாக வழங்க வேண்டுமென்று அறிவுரை வழங்கப்பட்டது. அதை நிறுவனம் பொருத்தி வருகிறது. மேலும், மின்தடை ஏற்படுகிறபோது வெளியே செல்லும் புகையை நிறுத்த தக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டதுடன், மாசுக் கட்டுப்பாடு வாரியப் பொறியாளர் இது குறித்து குழுவிற்கு அறிக்கை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

9. உறுதிமொழி எண் 278/91.—ஆலங்குளம் சிமெண்ட் ஆலையிலிருந்து வெளிவரும் தூசியினால் விவசாயம் கெடுவதைத் தடுக்க அந்நிறுவனம் தற்போது எடுத்து வரும் நடவடிக்கைகள் கண்டறியப்பட்டன.

1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்நிறுவனம் மாதம் ஒன்றுக்கு போர்ட்லண்ட் சிமெண்ட் 3,000 டன் வரையிலும் உற்பத்தி செய்கிறது. இவ்வாலையிலிருந்து வெளியேற்றப்படும் தூசியினால் சுற்றுப்புற சுகாதாரம் மாசு அடைவதைத் தடுக்க பல்வேறு விதமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தூசியை வெளியேற்றுகிற தொழில் நுட்பத்தை அமுல்படுத்த 1.5 கோடி ரூபாய் அளவில் பிளாண்ட் (Plant) அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் மின்சாரம் நிறுவனம் இல்லாத தூசியை இல்லாமையாக்கும் பகுதியில் உட்செலுத்தி மறுபடியும் பயன்படுத்தும் முறையினை செயல்படுத்த முடிவு செய்து இத்திட்டத்தை செயல்படுத்த இந்தியாவில் உள்ள தலைசிறந்த ஆலோசனை நிறுவனமான தேசிய சிமெண்ட் மற்றும் கட்டிடப் பொருட்கள் குழுவிடம் கொடுக்கப்பட்டு அவர்கள் இது குறித்து ஒரு அறிக்கை அளித்துள்ளார்கள். திருவாளர்கள் வினார் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனத்துடனும், பாரத மிகுமின் நிறுவனம், இராணிப்பேட்டை அவர்களிடமும் எஸ்டிமேட் 1.5 கோடி ரூபாய் அளவுக்கு டெண்டர் கொடுக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்திலிருந்து பணி தொடங்கப்பட்டுள்ளது என பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

(iv) குழுவின் பரிந்துரை

10. உறுதிமொழி எண். 259/94 —மதுரை டி.வி.எஸ். ரப்பர் ஆலையிலிருந்து வெளிவரும் கழிவுப் பொருட்களினால் சுற்றுப்புற சூழல் கெடுவதுடன் எச்.எம்.எஸ். காலனி மக்கள் பாதிப்புக்கு உள்ளாவது குறித்து மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரியிடம் இது குறித்து அறிக்கை ஒன்றை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்தது.

(v) பொதுக் குறிப்புரைகள்

11. பேரவையில் அளிக்கப்பெறும் உறுதிமொழிகளின் மீது குறிப்பிட்ட கால அளவிற்குள் நடவடிக்கைகள் முற்றுப்பெற வேண்டும் என்பதைக் குழு வலியுறுத்துகிறது.

12, குழுவின் இந்த அறிக்கைக்கு 1996 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை-600 009,
15-2-1996,
மாசி 3, யுவ,
திருவள்ளுவர் ஆண்டு 2027.

ஆர். சிங்காரம்,
தலைவர்.

53—440—1

இணைப்பு - 1.

1995-96ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாக அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாக முடிவு செய்யப் பட்ட உறுதிமொழிகள் குறித்த துறைவாரியான விவரம்.

நீலகிரி மாவட்டம்.

வேளாண்மைத் துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை	பொருள்	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
1	135-95	வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது நடந்த வாதத்திற்கு மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை. 19—4—1995.	உதகையில் விஜய நகரம் என்னுமிடத்தில் ரோஜாத் தோட்டம் ஒன்று நிறுவ அரசு நடவடிக்கை எடுக்கு மா என்பது குறித்து.	கடந்த 20—5—1995 அன்று உதகையில் விஜயநகரம் என்னுமிடத்தில் 6 எக்டர் பரப்பளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரோஜாத் தோட்டம் திறந்து வைக்கப்பட்டது. முதற்கட்ட செலவினமாக ரூ. 30.00 லட்சம் செலவிடப்பட்டுள்ளது உதகையில் 100வது மலர் கண்காட்சியை முன்னிட்டு இப்பணியில் இறந்து வைக்கப்பட்டது. முதற்கட்டமாக 1921 ரகங்களில் 17,526 (எண்கள்) ரோஜா செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளது. படிப்படியாக 5,000 ரோஜா ரகங்கள் நடவு செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது அனைத்துப் பணிகளும் முடிந்த நிலையில் இந்தியாவிலேயே பெரிய ரோஜாத் தோட்டமாக இது அமையும்.

(அ.சா.கு. எண். 63333/பொது/95-1. நாள் 14—12—1995.)

கோவை மாவட்டம்.

உள் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
2	174-94	போக்குவரத்து துறை மானியக் கோரிக்கையின் மீது அமைச்சர் அவர்களின் பதிலுரை 7—4—1994.	கோவையில் மாவட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்படுமா என்பது குறித்தது.	கோயம்புத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகம், கோயம் புத்தூர் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் கோயம்புத்தூர் (வடக்கு) வட்டார போக்குவரத்து அலுவலகம் என இரண்டாகப் பிரித்து 22—6—1994 நாளிட்டஉள் துறை நிலை ஆணை எண்.682-ல் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது புதிதாக துவக்கப்பட்ட கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் 19—8—1994 முதல் இயங்கி வருகிறது. ஆக கோயம்புத்தூரில் இரண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

(அ.சா.கு. எண்.-137058/ஜி.எல்./95-3 நாள் 12—12..1995.

ஊரக வளர்ச்சித் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
3	242-94	உடுக்குறியிட்ட வினா எண், 11071 திரு. நா. சா. பழனிச்சாமி எம்.எல்.ஏ., 27—4—1994.	கிணத்துக்கடவு தொகுதி சேரி 1, பாலையம் அரசு உயர்நிலைப்பள்ளி இயங்கி வரும் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை கல்வித் துறைக்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா, என்பது குறித்து,	ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் அறிக்கை வரப்பெற்று. ஆய்வு செய்யப்பட்டு. ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை கல்வித் துறைக்கு மாற்றுவதற்கு சுற்றாணையில் ஆணை பெறும் பொருட்டு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சருக்கு சுற்றனுப்பப்பட்டுள்ளது, (தே.மு.ச.எண். 44073/ஏ,பி./95-5 நாள் 12—12—1995,)

கைத்தறி. கைவினைப் பொருட்கள். துணிநூல் மற்றும் கதர்த் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
4	189/95	உடுக்குறியிட்ட வினா எண், 35664 டாக்டர் மு. சினியம்மாள். எம்.எல்.ஏ., 2-5-1995,	''அவினாசி ஒன்றியம். சாவக் பெரியார் மாவட்டத்தில். சாவக் காட்டுப்பாளையம் நெச வாளர் கூட்டுறவுச் சங்கம். மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர், நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகிய இரண்டு சங்கங்கள் தற்போது இயங்கி வருகின்றன, அதே போல் கோவை மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கண்ட இரண்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.	

1, சாவக்காட்டுப்பாளையம் அறிஞர் அண்ணா கைத்தறி நெச வாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

இச்சங்கம் 9—7—1979 தேதி பதிவு செய்யப்பட்டு அது செயல்பட்டு வந்தது, இச்சங்கம் உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இல்லாமையால் செயலிழந்து 31—8—1990 தேதி கலைக்கப்பட்டது, பின்னர் இச்சங்கத்தினை செயல்படுத்த உறுப்பினர்கள் முன்வந்ததின் பேரில் 3—1—1995 தேதி முதல் புதிய நிர்வாகக் குழு அமைத்துத் தரப்பட்டு நல்ல முறையில் செயல்பட ஆரம்பித்துள்ளது,

இச்சங்கத்தில் 307 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கத்தில் 167 தறிகள் செயல்பட்டு வருகின்றன. சங்கம் வெளிச் சந்தையில் நல்ல மதிப்புடன் போகக்கூடிய 2/100 எஸ்.கேஸ். மெர்சிரைஸ்டு, கோரா ரக சேலைகள் உற்பத்தி செய்து வருகிறது. சங்கம் சராசரியாக இங்கள் ஒன்றுக்கு 8 லட்சம் மதிப்புள்ள சேலைகள் உற்பத்தி செய்து வருகின்றது. சங்கம் படிப்படியாக நல்ல முன்னேற்றம் அடைந்து நடப்பு ஆண்டிலேயே ரூ.20.80 லட்சம் மத்திய கூட்டுறவு

வங்கியிலிருந்து காசுக்கடன் வசதி பெற்று கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட நட்டத் தொகை ரூ.48,170,70-ஐ ஈடு கட்டி நாளது தேதியில் தோராயமாக ரூ. 3.50 லட்சம் லாபத்தில் செயல்பட்டு வருகிறது.

மேலும் டாக்டர் ஜெ. ஜெயலலிதா கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் இ.எச். 114 என்ற பெயரில் புதிய சங்கம் 24—11—1995 பதிவு செய்யப்பட்டு, 1—12—1995 முதல் செயல்பட்டு வருகிறது.

சாவக்கட்டுப் பாளையத்தில் நெசவுத் தொழிலை பிரதான தொழிலாக நம்பி இருக்கும் நெசவாளர்கள் மிகுதியாக உள்ளபடியால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கவும் மற்றும் அரசின் நலத் திட்டங்களை நன்முறையில் செயல்படுத்தவும் மிகுந்த வாய்ப்பு உள்ளது.

(கடிதஎண். 18403/டி1/95-4, நாள் 12—12—1995).

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
5	51-95	உடுக்குறியிட்ட வினா எண். 21526-துணை வினா டாக்டர் மு. சினியம்மாள் 28—3—1995	அவினாசித் தொகுதி சொக்கம்பாளையத்தில் அரசு நிலம் தேர்வு செய்தும் சலவையாளர் போயர் மற்றும் நாவிதர்களுக்கு பட்டா கொடுக்க காலதாமதமாவதால் உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து	அவினாசித் தொகுதி, சொக்கம்பாளையத்தைச் சார்ந்த சலவையாளர், போயர் மற்றும் நாவிதர் வகுப்பினைச் சார்ந்த 174 பயனாளிகளுக்கு 11—3—1994ம் நாளன்று உவினாசித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மு சினியம்மாள் அவர்களால் பட்டாக்கள் வழங்கப்பட்டன. மேலும் எதிர்கால உபோயகத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்த பகுதியையும் மனையிடங்களாகப் பிரித்து கூடுதலாக 15 பட்டாக்கள் வழங்க 28— 9—1994-ஆம் நாள் ஆணையிடப்பட்டது. ஆக அனைத்து தகுதியுடைய நபர்களுக்கும் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன.

(அ.சா.கு. எண்.14159/எம்.டபுள்யுஜ/95-1, நாள் 8—12—1995.)

பொதுப்பணித்துறை.

(1)	(2)	(3)	(3)	(4)
6	247-94	உடுக்குறியிட்ட வினா எண். 9321, செல்வி எல். சுலோசனா, எம்.எல்.ஏ.. 28—4—1994.	மேட்டுப்பாளையம் தொகுதி பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் கோவலூர் அண்ணன் தம்பி பள்ளத்தில் குட்டை அமைக்கும் திட்டம் குறித்து.	நடாகம் பெரியநாயக்கன் பாளையம் பகுதியில் 3 குட்டைகள் கூட்டுவதற்கான திட்டங்கள் தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களுடன் கலந்தாலோசித்து அரசின் ஆய்வில் உள்ளது.

(நே-மு.க, எண். 40049/ஐ1/95-10, நாள் 8—12—1995.)

போக்குவரத்துத் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
7	150/95	உடுக்குறியிட்ட வினா எண். 35665 துணை வினா டாக்டர் மு. சீனியம்மாள்.எம்.எல்.ஏ 21—4—1995.	அவினாசி தொகுதி அன்னூரிலிருந்து அன்னூர்-குள்ளியூர் வரைக்கும் புதிதாக ஆத்திக் குட்டை வழியாக ஒரு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா எனபது குறித்து.	அவினாசி தொகுதி அன்னூரிலிருந்து ஆத்திக்குட்டை செல்லும் சாலையில் ஆத்திக்குட்டைப் பிரிவிலிருந்து வரை சுமார் 2 கி.மீ. தூரம் சாலை பழுதடைந்துள்ளது. அதிலும் குறிப்பாக 1 கி.மீ. தொலைவிற்கு மழைக்காரணமாக கற்கள் பெயர்ந்து மிக மோசமான நிலையில் இருக்கிறது. இது சம்பந்தமாக கோட்ட வளர்ச்சி அலுவலர், திருப்பூர் அவர்களுக்கு சாலை செப்பனிடக்கோரி கடிதம் எழுதப்பட்டு உள்ளது. சாலை சரி செய்யப்பட்டவுடன் மேற்படி வழித் தடத்தில் சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க ஏற்பாடு செய்யப்படும். (கடித எண் 32100/ஜே1/95-3 நாள் 14:12-95
8	155/95	உடுக்குறியிட்ட வினா எண். 39300 துணை வினா திரு. கே. செல்வராஜ்,எம்.எல்.ஏ 24—4—1995	கோயம்புத்தூரிலிருந்து பம்பாய்க்கு ஜெ.ஜெ. போக்கு வரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	கோவை-பம்பாய் தடமானது பிற மாநிலத் தடமாகும். இத்தடமானது கோயம்புத்தூரிலிருந்து ஈரோடு சேலம் திருவண்ணாமலை, பெங்களூர் துமகூர், சித்ரதுர்கா., தேவணகிரி ஹூப்ளி பெல்காம், சோலாப்பூர் புனா வழியாக பம்பாய்க்கு இயக்கப்பட வேண்டும் இத்தடத்தின் நீளம் 1385 கிலோ மீட்டராகும். இவற்றில் தமிழகத்தில் 340 கிலோ மீட்டரும் கர்நாடக மாநிலத்தில் 636 கிலோ மீட்டரும் மராட்டிய மாநிலத்தில் 409 கி. மீட்டரும் அடங்கும். இத்தடத்தினை கர்நாடகம் மற்றும் மராட்டிய மாநில அரசுகளின் ஒப்பந்த முடன்தான் இயக்க இயலும், இத்தகைய அதிக தொலைவுள்ள தடங்களில் பயணிகள் பேருந்துகளில் விரும்பி பயணம் செய்ய மாட்டார்கள். மேலும் பேருந்து பழுது அடைந்தாலோ அல்லது விபத்துக்குட் பட்டாலோ பயணிகளுக்கு மாற்று ஏற்பாடு செய்து, பேருந்தை பழுது பார்க்க எடுத்து வர மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகவேண்டும். எனவே கோவை பம்பாய் தடத்தினை இயக்குவது இயக்க ரீதியில் சாத்தியமில்லை. (கடித எண்.32100/ஜே1/95-3, நாள் 14-12-1995.)

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
9	213/94	உடுக்குறியிட்ட வினா எண். 20233 துணை வினா திரு கே.பி. ராஜு எம்.எல்.ஏ. 21—4—1994.	கோவை மாவட்டம் குறிச்சி பேரூராட்சியில் 1 லட்சம் மக்கள் தொகைக்கு மேல் வாழ்கிறார்கள். அதில் 30,000 பேர் இஸ்லாம் சமூகத்தினர். அவர்கள் கோவை அரசு மருத்துவமனைக்குச் செல்ல கஷ்டப்படுவதால் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செயுமா என்பது குறித்து.	30,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்கிற அடிப்படையில் கிராமப்புறங்களில் மட்டுமே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுகின்றன. குறிச்சி பேரூராட்சி பேரூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்தது என்பதுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிராமபுறங்களில் மட்டுமே செயல்பட முடியும் எனும் கொள்கை அடிப்படையில் குறிச்சி பேரூராட்சியானதால் இங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. (அ.சா.கு. எண். 83448/இசட்1/95-2, நாள் 11—12—1995.)

பெரியார் மாவட்டம்,

உள் துறை,

(1)	(2)	(3)	(4)	(5)
10	87/95	மாநில ஆயத்தீர்வை. தியணைப்புத்துறை மற்றும் காவல்துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு முதலமைச்சரின் பதிலுரை, 10—4—1995,	ஈரோட்டை தலைமையிட மாகக் கொண்ட பெரியார் தியணைப்புக் கோட்டம் அமைக்க அரசு ஆனை செய்யுமா என்பது குறித்து	21—7—1995 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண், 1097-இல் ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்ட பெரியார் தியணைப்புக் கோட்டம் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன,

(அ, கா, கு, எண், 137058/ஜி, எல்,/95-3. நாள் 11—12—1995)

11	302/94	உடுக்குறியிடாத வினா எண், 14727—திரு, வே, பெரிய சாமி. எம், எல். ஏ., 3—11—1994,	பெரியார் மாவட்டம் அந்தியூர் கொல்லப்பாளையம் பிரிவிலிருந்து ஆதிரெட்டியூர் வழியாக திருப்பூர் வரையுள்ள தார் சாலை பழுதடைந்து இருப்பதால் அதை சீர்படுத்த அரசு ஆனை செய்யுமா என்பது குறித்து.	உறுதிமொழியில் குறிக்கப்பட்டுள்ள பணி மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மழையினால் மிகவும் பழுதடைந்துள்ள சாலை பகுதிகளுக்கு தார் நொடிகள் போடப்பட்டுள்ளன, வெள்ள நிவாரண நிரந்தர சீரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ. 720 இலட்சம் மதிப்பீட்டில் அந்தியூர் ஆதிரெட்டியூர் சாலை கி. மீ. 2/0—3/6 மரவ பாளையம் ஆதிரெட்டியூர் சாலை கி. மீ. 0/0—2/6 மற்றும் வெள்ளித் திருப்பூர் மூலப்பாளையம் சாலை கி. மீ. 0/0—3/0 ஆகிய சாலை பகுதிகளுக்கு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

நே. மு. க. எண், 40049/ஐ-1/95-10. நாள் 8—12—1995,

திண்டுக்கல் அண்ணா மாவட்டம்,

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,

(1)	(2)	(3)	(4)	(5)
12	70/93	உடுக்குறியிடாத வினா எண், 8642. திரு. எம். ஆண்டி அம்பலம். எம், எல். ஏ., 13—2—1993,	திண்டுக்கல் நகராட்டையப் பகுதிகளான கோபால சமுத்திரம், ஐயன்குளம். பாரைகுளம், அரண்மனை குளம் ஆகியவற்றின் கழிவு நீர் தேங்கி கற்றுப் புற சுகாதார சூழ்நிலை பெரு மளவு பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ? அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து	திண்டுக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமலபடுத்துவதற்காக ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வுப் பணிகள் அக்டோபர் 1993ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆய்வுப் பணிகள் முடிவுற்றதும் உரிய திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வாரியக் குழுவின் ஒப்புதலுடன் அரசின் அனுமதிக்கு அனுப்பப்படும். அரசு அதன் மீது உரிய ஆனை வெளியிடும்.

(கடிதம் எண், 56956/பி, பி1/- 95/4, நாள் 13— 12—1995).

13	343/94	உடுக்குறியிட்ட வினா எண். 20280, திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள், எம். எல்.ஏ. 8-11-1994.	பழைய பிலுக்குவார்பட்டி, விளாம்பட்டி வழி கொங்கம்பட்டி எத்திலோடு சாலை சீர் செய்யும் பணி அரம்பிக்கப்படுமா என்பது குறித்து.	சட்டப் பேரவை உறுதிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய பிலுக்குவார்பட்டி, விளாம்பட்டி (வழி) கொங்கம்பட்டி எத்திலோடு சாலை சீர் செய்தல் என்பது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள இதர மாவட்டச் சாலையாக விளாம்பட்டி பழைய பிலுக்குவார்பட்டி சாலையை சரண்டப்பது குறித்ததாகும். இச் சாலையில் மொத்த நீளம் 6.80 கி.மீ. (0/0—6/8) ஆகும். இதில் கி.மீ. 0/0—2/0 மற்றும் 3/6—6/0 ஆகிய பகுதிகளை தொழிற்சாலை அலகு பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை சீர் செய்யும் திட்டத்தின் கீழ் ரூ. 7.10 லட்சமும் கி.மீ. 2/0—3/0 வரை உள்ள பகுதியை சிறப்பு பராமரிப்பு பணியாக ரூ. 2.00 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தவும் மதிப்பீடுகள் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளை குறித்த காலத்தில் நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(நே. மு. கு. எண். 40049/ஜ-1/95-10, நாள் 8-12-1995).

போக்கு வரத்துத் துறை

(1)	(2)	(3)	(4)	(5)
14	37-95	உடுக்குறியிட்ட வினா எண். 37292 திரு. எச். எம். ராஜூ எம். எல். ஏ., 24..3..1995.	திண்டுக்கல்-வேடசந்தூர் மருங்காபுரி தொகுதியை இணைக்கும் திண்டுக்கல் எல்லிருந்து கடவூருக்கு பேருந்து 12 நடைகளிலிருந்து மேலும் 6 நடைகள் அதிகப்படுத்தப்படுமா என்பது குறித்து	இரண்டு மாநகரங்கள் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திண்டுக்கல்-கடவூர் தடத்தில் (பாலவிடுதி வரை) இயங்கும் 6 தனி நடைகளும் ஊர்மார் பேருந்தில் மூலம் இயங்கும் 8 தனி நடைகளும் ஆக மொத்தம் 14 தனிநடைகள் இயக்கப்பட்டு வருகிறது.
15	41/95	உடுக்குறியிட்ட வினா எண் 37292 துணை வினா மாண்புமிகு பி. காந்திராசன், பேரவைத் துணைத் தலைவர் 24-3-95	திண்டுக்கல் -கடவூர் சாலையில் கூடுதலாக பேருந்துகள் இயக்குவது குறித்து.	(கடித எண். 31200/ஜே. 1/95-3, நாள் 14..12..1995).

மதுரை மாவட்டம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

16	340-94	உடுக்குறியுட்ட வினா எண். 17540-துணை வினா திருமதி இரா. பாண்டியம்மாள், எம்.எல்.ஏ., 7-11-1994.	மதுரை மாவட்டம், உலிம் பட்டி வட்டம், தொட்டப்ப நாயக்கனூர் அப்டேத்தார் நகரில் ஆழ் குழாய் இணறு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	மதுரை மாவட்டம், உலிம்பட்டி வட்டம், தொட்டப்ப நாயக்கனூர், அம்பேத்கார் நகரில் 28-5-1995ல் ஆழ் குழாய் கிணறு தோண்டப்பட்டு 26-6-1995ல் ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பிற்கு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தால் ஒப்படைக்கப்பட்டது.

(1)	(2)	(3)	(4)	(5)
17	341-94	உடுக்குறியிட்ட வினா எண். 17540 துணை வினா திருமதி இரா. பாண்டியம் மாள், எல்.எம்.ஏ., 7—11—1994.	மதுரை மாவட்டம் உலகம் பட்டியிலுள்ள தொட்டப்ப நாயக்கனூர் அம்பேத்கார் இராமத்தில் ஒரு மேல்நிலை தொட்டி நிறுவ அரசு முன் வருமா என்பது குறித்து.	உறுதிமொழி சம்பந்தப்பட்ட விவரம் குறித்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியோரிடம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரால் அறிக்கை கோரப்பட்டுள்ளது. அன்னாரின் முடிவான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

உள்துறை.

18	46-95	உடுக்குறியிட்ட வினா எண். 2175, துணை வினா திரு. ஓ. எஸ். அமர்நாத், எம்.எல்.ஏ., 17—3—1995.	மதுரை நகரில் காலை 8.00 மணிக்குப் பின்னர் நுழையும் லாரி போன்ற வாகனங் களுக்கு அவ்விடத்திலேயே அபராதம் விதிக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	மோட்டார் வண்டிச் சட்டத்தின் விதிமுறைகளை மீறுவோர் மீது தலத்திலேயே அபராதம் விதிக்கும் முறை மதுரையில் அமுல் படுத்த 28—4—1995 நாளிட்ட அரசு உள்துறை நிலை ஆணை எண். 628இல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. (அ.சா.கு. எண். 137058/ஜீ. எல்./95-3, நாள் 12—12—1995).
19	105-95	போக்குவரத்துத்துறை மற்றும் வனத்துறை மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை 17—4—1995.	மதுரையில் உள்ள பழங்கா நத்தம் பகுதியில் இருப்பது யூனிட் அலுவலகமாக (பகுதி அலுவலகமாக) இருப்பதால் அதை வட்டார போக்குவரத்தாக மாற்ற அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	மதுரை பழங்காநத்தம் பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக நிலை உயர்த்த, 29—6—95 நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண். 966இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பழங்காநத்தத்தில் நிலை உயர்த்தப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலகம் 25—9—1995 முதல் இயங்கி வருகிறது. (அ.சா.கு. எண். 137058/ஜீ. எல்./95-3, நாள் 12—1—1995)

சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை.

20	20./94	கவன ஈர்ப்புத் தீர்மானம் எண். 55-ன் மீது டாக்டர் மு. காளிராசன் எம்.எல்.ஏ. திரு ஓ.எஸ். அமர்நாத், எம்.எல்.ஏ. நாள் 30-4-94	மதுரை டி.வி.எஸ். ரப்பர் ஆலையில் இருந்து வெளி வரும் கழிவுப் பொருட் களினால் சுற்றுப்புறச் சூழல் கெடுவதுடன் எச். எம்.எஸ். காலனி மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளா வது குறித்து.	தமிழ்நாடு நீர் (மாசுகடுப்பு மற்றும் கடுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு கடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 (திருத்தப்பட்டபடி) ஆகிய சட்டங்களின் கீழ் தொழிற்சாலை உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மாற்றம் செய்யவும் வண்ண பூசும் பிரிவு ஒன்றை ஏற் படுத்தவும் விண்ணப்பம் செய்தது.

உற்பத்தி செய்யப்படும் பொருட்களாவன :—

1. கேமல் பேக் பிரிக்யூர்டு டிரட் மற்றும் டிரட் பொருட்கள் (Camel back precure tread and retread Materials) (மாதத்துக்கு 100 டன்கள்)

2. ரப்பர் அச்சுப் பொருட்கள் (Rubber Moulded Products) (மாதத்திற்கு 125 டன்கள்)

3. ரப்பரிலிருந்து உலோகப்பட்டை அடித்த பொருட்கள் (Rubber to Metal bounded items)

4. ரப்பர் கவர் மற்றும் பிளாடர்கள் (Covering envelope and bladders)

5. உருளைகள் மற்றும் கப்பிகள் ஆயிவற்றிற்கு மீண்டும் ரப்பர் பொருத்துதல் (Rerubberising of Pulleys and Rollers) (மாதம் ஒன்றிற்கு 25 டன்கள்)

காம்பன் பிளாக், ரப்பர், ஸிங்க் ஆக்ஸைடு சல்பர், கெட்டிப் படுத்தும் பில்லர்ஸ், பாண்டி, ஏஜெண்டஸ் மற்றும் ஸ்டியரிக் அமிலம் ஆகியன மூலப் பொருட்களாகப் பயன்படுத்தப் படுகிறது.

இத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 3.5 கி.லிட்டர்கள் வடிகால் கழிவு நீரும், 5 கி.லிட்டர்கள் உணவகக் கழிவு நீரும் 35 கி.லிட்டர்கள் தொழிற்சாலை கழிவு நீரையும் வெளியேற்றுகிறது. நச்சுத் தடை தொட்டி மூலம் வடிகால் கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. அத் தொட்டியிலிருந்து வழிந்து வெளியேறும் கழிவு நீரும் உணவகக் கழிவு நீரும் சுத்திகரிக்கப்பட்டு முதல் நிலை படியவைக்கும்/சேகரிப்பு தொட்டி காற்றேற்று தொட்டி, ரசாயனங்கள் கலக்கும் தொட்டி மணல் வடிகட்டி மற்றும் தெளிய வைக்கும் தொட்டி மூலம் சுத்திகரிக்கப்பட்டு வெளியேறறப்படுகிறது.

அச்சுக் கழுவும் பிரிவு, அமில ஊறல் (Acid Pickling) பகுதியிலிருந்து வெளியாகும் தொழிற்சாலைக் கழிவு நீர் இரண்டு சேகரிக்கும் தொட்டிகள் இரண்டு நடு நிலைப் படுத்தும் தொட்டிகளின் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது. நீர் கடினத் தன்மை அகற்று நிலையத்திலிருந்து வரும் ரீஜெனெரேஷன் கழிவு நீர், சேகரிக்கும் தொட்டியில் சேகரிக்கப்படுகிறது. காற்று அழுத்தப் பிரிவிலிருந்து (Air Compressors) வெளியேறும் கழிவு நீரில் உள்ள எண்ணெய் மற்றும் கிரீஸ் போன்றவை எண்ணெய் மற்றும் கிரீஸ் அகற்றும் தொட்டி மூலம் நீக்கப்படுகிறது. இவ்வனைத்து பிரிவிலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் இறுதியில் ஒன்றாக கலந்து, சேகரிக்கும் தொட்டி, தெளியவைக்கும் தொட்டி, மணல் வடிகட்டி மூலம் சுத்திகரிக்கப்பட்டு, வெளியேற்றப்படுகிறது. குளிர்வித்தலுக்கு பயன்படுத்தப்படும் நீரின் மிகுதி, தனியான தொட்டியில் சேகரிக்கப்பட்டு மறுபடியும் குளிரூட்டலுக்கே பயன்படுத்தப்படுகிறது.

டீசல் எண்ணெயில் இயங்கும் தெர்மோபேக் எண்ணெய் அடுப்புக்கு 11 மீட்டர் உயரமுள்ள புகை போக்கி பொருத்தப் பட்டுள்ளது. மணிக்கு 5 டன் அளவான கொதிகலனிற்கு 18.30 மீட்டர் உயரமுள்ள புகை போக்கியும், மணிக்கு 2 டன் அளவான இரண்டு கொதிகலன்களுக்கு தனிதனியே 12.20 மீட்டர் உயரமுள்ள 2 புகை போக்கிகளும் பொருத்

தப்பட்டுள்ளன. கொதிகலனில் வெளியாகும் குழாய்கள் வழியை கட்டுப்படுத்த நீரினை சிறு துளிகளாக தெளிக்கும் அமைப்பினை (Sprinkler System) 1-6-94 அன்று அமைத்து இயக்கப்பட்டது. உணவகத்தில் உள்ள கொதிகலனுக்கு 9.30 மீட்டர் உயரமுள்ள இரட்டை புகை போக்கிகளை அமைத்துள்ளது. 310 கே.வி.ஏ. திறனுள்ள டீசல் ஜெனரேட்டருக்கு 5.25 மீட்டர் உயரமுள்ள புகை போக்கி ஒன்று (Exhaust Pipe) பொருத்தப்பட்டுள்ளது. 165 கே.வி.ஏ. திறனுள்ள இரண்டு ஜெனரேட்டர்கள் அமையவற்றுக்கு தண்ணீர் தொட்டியுடன் (Water tub) இணைக்கப்பட்ட 8.5 மீட்டர் உயரமுள்ள பகைபோக்கி (Comm n Stock) ஒன்று பொதுவாகப் பொருத்தப்பட்டுள்ளது. வர்ணம் பூசும்பிரிவிலிருந்து வெளியேறும் வாயுக் கழிவுகள் உள்ளிழுக்கப்பட்டு தண்ணீர் தொட்டியில் படியவைக்கப்படுகிறது. ஷாட் பளாஸ்டிங் (Shot Plasting Sactton) பிரிவிற்கு ஒரு தூசு சேகரிப்பான் (Dust Collector) பொருத்தப்பட்டுள்ளது. சுற்றுப்புற காற்றின் தர நிர்ணயம் செய்வதற்கான ஆய்வு, தொழிற்சாலையை சுற்றி 5 இடங்களில் செய்யப்பட்டது. ஆய்விற்கையின்படி மாதின் அளவு வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகளுக்குட்பட்டு இருந்தது அறியப்பட்டது

2. திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரிஸ் லிமிடெட் (டயர் சர்வீஸ் பிரிவு)

இந்நிறுவனத்தை மதுரை வட்டார இணை தலைமை சுற்றுப்புறச் சூழல் நலப் பொறியாளர் 9-2-95 அன்று பார்வையிட்டார். விபர அறிக்கை கீழ்கண்டவாறு :

இந்நிறுவனமானது, மாதம் ஒன்றுக்கு 1415 டயர் (உருளிப் பட்டை) புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் நாளொன்றுக்கு 0.5 கி.லி. கழிவு நீரையும் 0.5 கி.லிட்டர் தொழிற்சாலை கழிவு நீரையும் வெளியேற்றுகின்றது. இத் தொழிற்சாலையின் செய்முறைகள் வருமாறு :..

பழைய டயர்களை ஆய்வுக்கு உட்படுத்துதல். மெருகேற்றுதல் பழுது பார்த்தல். பூச்சிடுதல். மாதிரி அச்சிலிட்டு வார்த்தல். குளிர வைத்தல் பிரவர் வெளி அனுப்புதல் ஆகியன ஆகும் குளிர வைத்தல் நீராவி நச்சுத் தொட்டி மூலம் சுத்திகரிக்கப்படுகிறது, தொட்டியிலிருந்து மிதந்தோடும் கழிவு நீரானது மேற்படி தொழிற்சாலையில் ரப்பர் பிரிவுள்ள நீராவி மூலம் சுத்திகரிக்கும் நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது, தொழிற்சாலைக் கழிவு நீராவது சூரிய ஒளியினால் ஆவியாக்கப்படும் தொட்டியில் வெளியேற்றப்படுகின்றது.

இத்தொழிற்சாலையானது. ஆரம்ப காலத்தில் ரப்பர் கழிவுகளை எரி பொருளாகப் பயன்படுத்திவந்தது, அருகிலுள்ள குடியிருப்புகளிலிருந்து காற்று மாசு குறித்த புகார்கள்

பெறப்பட்ட மையால். இந்நிறுவனமானது. ரப்பர் கழிவுகளை எரி பொருட்களாகப் பயன்படுத்த வேண்டாம் என்றும் தகுந்த மாசு கட்டுப்பாடு சாதனங்களை பொருத்துமாறும் வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டது, இதன் படி. இந்நிறுவனம் டயர கழிவுகளை எரி பொருட்களாகப் பயன்படுத்துவதை நிறுத்தி விட்டது,

1, இத் தொழிற்சாலை. காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களைப் பொருத்தி 8—9—1994-லிருந்து அவற்றை இயக்கி வருகிறது,

2, வாயுக் கழிவுகள் டயர் மெருகிடும் பிரிவு மற்றும் கொதிகலன் புகை போக்கிகளிலிருந்து வெளியேறுகிறது. டயர் மெருகிடும் பணி ஒரு மூடப்பட்ட அறையினுள் நடைபெறுகிறது, இதனால் ஏற்படும் தூசி. தூசி சேகரிப்பானில் சேகரிக்கப்படுகிறது, கொதிகலனிலிருந்து வெளியேறும் வாயுக் கழிவுகள் தண்ணீர் தெளிக்கும் அமைப்பு (Sprinkler System) மூலமாக செலுத்தப்பட்டு 21 மீட்டர் உயரமுள்ள புகை போக்கி மூலம் வெளியேற்றப் படுகிறது, தண்ணீர் தெளிக்கும் பிரிவிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மீண்டும் அதே பிரிவிலேயே பயன்படுத்தப் படுகிறது, தொழிற்சாலை. மெருகிடும் பிரிவிலிருந்து வெளிப்படும் தூசிகளை சேகரிக்க ஒரு தூசி சேகரிப்பானை தூசியும் வெளியே தப்பிச் செல்லாவண்ணம் அத் தூசி சேகரிப்பானை சுற்றி முழுவதுமாக தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது,

3, 40 கே.வி.ஏ. இறனுள்ள டீசல் ஜெனரேட்டர் கருவிக்கு 9 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கி (Exhaust Pipe) ஒன்றை தொழிற்சாலை பொருத்தியுள்ளது,

4, 29—12—1994 அன்று காற்று தர நிர்ணய ஆய்வு (Ambient Air Quality) இத் தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் 5 இடங்களில் செய்யப்பட்டது, காற்றின தரம். வாரியம் நிர்ணயித்துள்ள தர நிர்ணயித்திற்குட்பட்டு இருந்தது அறியப்பட்டது,

இத் தொழிற்சாலைக்கு நீர் மற்றும் காற்று மாசு தடுப்பு சட்டங்களின் கீழ் வாரிய இசைவு அளிக்கப்பட்டு 31—3—1994 முடிய இசைவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. 13—10—1995 அன்று உறுதி மொழிக்குழுவினர் மதுரை டி.வி.எஸ். ரப்பர் ஆலையைப் பார்வையிட்டப்போது, உறுதி மொழிக் குழுத் தலைவர், மேற்படி ஆலையிலிருந்து வெளிவரும் தூசிக் கழிவினால் ஏற்படும் பிரச்சனை குறித்து எச்.எம்.எஸ். காலனி பகுதி மக்களை அணுகி அவர்களின் கருத்துக்களைப் பெற்று அதனை மனுக் குழுவுக்குத் தெரிவிக்கும்படி பணித்

துள்ளார்கள். அதன் அடிப்படையில், மதுரை சுற்றுச் சூழல் நலப் பொறியாளர் 31—10—1995 அன்று எச். எம்.எஸ். காலனி மக்களை அணுகி திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் ரப்பர் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் தூசிக் கழிவுகளில் ஏற்படும் பிரச்சினை குறித்த விசாரித்து அறிந்தபோது, தற்போது பிரச்சினை குறைந்துள்ளதாக அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது மேற்படி தொழிற்சாலைக்கு 31—3—1996 வரை வாரிய இசைவாணை வழங்கப் பட்டுள்ளது. எனினும், வாரியம் இத் தொழிற்சாலையின் நடவடிக்கைகளை முனைப்புடன் கண்காணித்துவருகிறது.

(அ. சா. கு. எண் 29212/எம்.எஸ்.பி./95-5, நாள் : 13—12—1995.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
21.	104/94	உடுக்குறியிட்ட வினா எண் 17544, துணை வினா, திருமதி இரா. பாண்டியம்மாள், சட்டமன்ற உறுப்பினர், திரு. தவசி, சட்டமன்ற உறுப்பினர்-25—3—1994.	மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு மருத்துவ மனையை கூடுதல் வசதிகளுடன் விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	1. உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு இந்திய மக்கள் தொகைத்திட்டம் 5-ல் அரசாணை நிலை எண் 214 சுகாதாரம், நாள் : 4—4—1995-ல் இழ்க்கண்ட வசதிகள் செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 1. ரூ. 6 இலட்சம் செலவில் ஸ்கேனர் வாங்குதல் மற்றும் ஒரு அறைக்கு குளிர்சாதன வசதி செய்தல் ; 2. பிரசவ அறைக்கு ரூ. 5 இலட்சம் செலவில் லேபர் டேபில் சக்ஸன் அப்பரடஸ், ரேடியண்ட் வார்மர் போட்டோ தெரிபியூவிட் நிபுலைசர் ஆகிய உபகரணங்கள் வாங்குதல். 3. அறுவை அரங்கத்திற்கு தேவையான கருவிகள் பெற்று நவீனப்படுத்தப்பட உள்ளது. 4. ரூ. 36,000 செலவில் இந்த ஆண்டு மின் விசிறி வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. இதற்கு மாநில திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

அ. சா. கு. எண் 83448/இசட் 1195-2, நாள் : 11—12—1995.

காமராஜர் மாவட்டம்

பொதுப்பணித் துறை

(1)	(2)	(3)	(4)	(5)
22	59/95	சட்டமன்றப் பேரவை விதி 55வது கீழ் அறிவிப்பு திரு. ஜெ. பாலகங்காதரன். எம்.எல்.ஏ., 31-3-1995,	சிவகாசி அரசு மருத்துவ மனையில் உள்ள அறுவை சிகிச்சைக்கூடத்தில் 3 ஏர் கண்டிஷனர் மிஷின்கள் இயங்காதது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து,	சிவகாசி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை கூடத்தில் உள்ள பழுதுபார்க்க வேண்டிய ஏர்கண்டிஷனர் மிஷின்கள் தற்போழுது பழுது பார்க்கப்பட்டு. நல்முறையில் இயங்குகின்றன. (நே. மு. க. எண், 40049/ஐ1/95 10 நாள். 8—12—1995).

பொதுப்பணித் துறை

(1)	(2)	(3)	(4)	(5)
23	34/94	உடுக்குறியிடாத வினா எண், 11652. திரு. தி. சாத்தையா எம்.எல்.ஏ., 18-2-1993,	இராஜபாளையம் தொகுதியில் உள்ள கண்மாய்களுக்குத் தண்ணீர்வரும் ஆறுகள் கால்வாய்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா எனபது குறித்து,	காமராஜர் மாவட்டம். இராஜபாளையம் வட்டம். கண்மாய் மற்றும் நீர்வழிப்புறம்போக்கில் மொத்தம் 90 இனங்களில் சுமார் 44.66 ஹெக்டேர் பரப்பளவிலான ரு, 44,12,408 மதிப்புள்ள ஆக்கிரமிப்புகள் கீழ்க்கண்ட விவரப்படி அகற்றப்பட்டுவிட்டன :

கண்மாயின் பெயர்,	(1)	ஆக்கிரமிப்பு எண்ணிக்கை, (2)	அகற்றப்பட்ட ஆக்கிரமிப்பு விஸ்தீரணம், (3)
1, கணபதியாருளம்	...	12	0,62,0
2, பீராக்குடி	..	16	6,10,0
3, கொல்லன்னரணி	..	21	12,46,0
4, பிட்டம்பரனேரி	...	19	14,41,5
5, நடுவக்குளம் கண்மாய்	..	22	11,06,5
கூடுதல்	..	90	44.66.0

(அ,சா,கு, எண், 7812/எச்ஸ்1/95-6. நாள் 13—12 1995,1

இராமநாதபுரம் மாவட்டம்:

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை:

(1)	(2)	(3)	(4)	(5)
24	28/94	உடுக்குறியிடாத வினா எண், 16844. திரு. டாக்டர் ச, சுந்தராராஜ். எம்.எல்.ஏ,. 4—1—1994,	பரமக்குடி தாலுகாவில் பால் வாடிப் பள்ளிகள் துவங்க அரசு ஆணை செய்யுமா என்பது குறித்து.	இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுக்காவில் ஒருங் கிணைந்த குழந்தைகள் வளர்சித் திட்டத்திற்கீழ் கீழ்க்கண்ட இடங்களில் பாலவாடி பள்ளிகள் துவங்க 28—9—1995 நாளிட்ட 253 எண், கொண்ட அரசு அனையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1, முத்துராமலிங்கபுரம், 2, சத்தியமூர்த்தி காலனி, 3, சுந்தரநகர், (தெ.மு.த. எண். 29733/எஸ்,டபுள்யூ, II (1) /95-3. நாள் 13—12—1995).

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(1)	(2)	(3)	(4)	(5)
25	596/93	கவனஈர்ப்பு அறிவிப்பு டாக்டர் எஸ். சந்தராராஜ். சட்டமன்றப் பேரவை உறுப்பினர் 30-4-1993,	இராமநாதபுரம்பரமக்குடி நகராட்சியில் மேலச் சத்திரத்தில் உள்ள நகராட்சி ஆரம்பப்பள்ளி இடிந்த நிலையில் உள்ள கட்டிடத்தில் இயங்குவ தால் அங்குள்ள பாதுட்ட நிலை குறித்து.	பரமக்குடி மேலச்சத்திரம் புல எண், 544/24இல் 0.17 ஏக்கர் நிலப்பரப்பில் 5,340 சதுரடி பரப்பளவிற்கு நகராட்சி ஆரம்ப பள்ளி கட்டிடம் புதியதாக கட்டி முடிக்கப்பட்டு 30-7-1995 அன்று திறந்து வைக்கப்பட்டது. (கடி.கு எண். 56956/ பி எஸ்/95-5. நாள் 13—12—1995).

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
26	277/94	உடுக்குறியிடாத வினா எண். 11676, டாக்டர் ச. சுந்தர ராஜ், எம்.எல்.ஏ., 5—5—1994.	இராமநாதபுரம் பரமக்குடி ஒன்றியம் பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலை யத்தில் தண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா என்பது குறித்து.	இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஒன்றியம் பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் சைம்பம்பு போடப் பட்டு இதன் மூலம் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. (அ.சா.கு. எண். 83448/இசட்1/95-2. 11— 12 —1995).

வருவாய்த்துறை

(1)	(2)	(3)	(4)	(5)
27	170/94	மானியக்கோரிக்கை எண். 5, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் பதிலுரையில் விளக்கம் 7—4—1994.	இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கப்படுமா என்பது குறித்து.	அரசாணை (நிலை) எண். 277, வருவாய், நாள் 15-3-1995ன் படி இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கடலாடியைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வட்டம் 18—3— 1995 முதல் செயல்பட்டு வருகின்றது. (அ.சா.கு. எண். 7812/இசட் 1/95-6, நாள் 13—12— 1995).

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(1)	(2)	(3)	(4)	(5)
28	401/93	உடுக்குறியிடாத வினா எண். 7815, திரு. மா.சா.மா. இராமச்சந்திரன், எம்.எல்.ஏ., 21—4—1993.	பசும்பொன் மாவட்டம் தேவகோட்டை ஒன்றியம் தேவகோட்டை நகரின் கப்பிச் சாலை தற்போது பழுதடைந்து உள்ளதைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	தேவகோட்டை நகராட்சி முன்பு டவன் பஞ்சாயத்தாக இருந்தது முனிபாலிட்டியாக ஆனது. சென்ற ஆண்டு ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்துச் சாலைகளை உயர்த்தியிருக்கிறார்கள். இவ்வாண்டும் இரண்டு இலட்சம் ரூபாய் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (குடித எண். 56956/பி & ப்பி/95-4, நாள் 13—12—1995).

இணைப்பு—2

அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற்றப்பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டு வாரியான பட்டியல்.

ஆண்டு.	அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள்.	நிறைவேற்றப் பெற்றதாக/ படித்துப் பதிவு செய்யப்பெற்றதாக கருதப்பெற்றவை.	நிலுவையில் உள்ளவை.
(1)	(2)	(3)	(4)
1983 ...	335	334	1
1984 ...	274	274	---
1985 ...	461	458	3
1986 ...	681	677	4
1987 ...	635	621	14
1989 ...	390	383	7
1990 ...	548	534	14
1991 ...	376	360	16
1992 ...	480	444	36
1993 ...	747	674	73
1994 ...	360	240	120
1995 ...	231	22	209
			496

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு— 3

நீலுவையிலுள்ள உறுதிமொழிகள் குறித்த துறைவாரியான மற்றும் ஆண்டு வாரியான பட்டியல்

வரிசை எண்	துறைகளின் பெயர்,	1983	1984	1985	1986	1987	1989	1990	1991	1992	1993	1994	1995	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)
1	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை	—	—	—	—	—	—	1	1	5	2	5	9	23
2	உள்துறை	—	—	—	—	—	—	—	1	—	4	3	20	28
3	ஊரகவளர்ச்சித் துறை	—	—	—	—	1	—	1	—	2	5	6	11	26
4	கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை	—	—	—	—	1	—	—	1	3	3	12	8	28
5	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை	—	—	—	—	—	—	1	—	3	5	2	9	20
6	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை	—	—	—	—	—	—	—	—	—	—	1	4	3
7	கைத்தறி, கைவினைப் பொருட்கள் மற்றும் கதர்த்துறை	—	—	—	—	—	—	—	—	—	2	—	11	13
8	சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை	—	—	—	—	—	—	—	—	—	2	5	4	11
9	சட்டத்துறை	—	—	—	—	—	—	—	—	—	—	—	2	2
10	சட்டமன்றப் பேரவைச் செயலகம்	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
11	சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை	—	—	—	—	—	—	—	—	—	—	3	5	8
12	செய்தி மற்றும் சுற்றுலாத்துறை	—	—	—	—	2	1	1	1	2	1	3	7	18
13	தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை	—	—	—	—	—	—	—	—	—	—	—	1	1
14	திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
15	தொழில் துறை	—	—	—	—	1	—	—	2	1	—	1	3	8
16	தொழிலாளர் மற்றும்வேலைவாய்ப்புத் துறை	—	—	—	—	—	—	—	—	—	2	3	2	7

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	..	..	..	2	3	1	2	..	5	10	5	12	40
18 நிதித் துறை												2	2
19 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை													
20 பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறை												1	1
21 பொதுத்துறை							1	..	..	..	1	..	2
22 பொதுப் பணித் துறை			2	2	6	2	5	6	8	22	44	32	129
23 போக்குவரத்துத்துறை							1	..	..	2	8	16	27
24 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை										5	4	8	17
25 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை												1	1
26 வணிகவரி மற்றும் அறநிலையத்துறை	1	..	..	..	..	..	..	..	1	..	3	8	13
27 வருவாய்த்துறை		..	1	..	..	1	1	2	4	2	7	11	29
28 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை						1	..	..	1	2	1	8	13
29 வேளாண்மைத்துறை							..	..	1	2	2	10	15
30 எரிசக்தித்துறை						1	..	..	..	1	1	2	5
31 மறுதொழில் துறை								1	..	1	..	2	4
மொத்தம்	1	..	3	4	14	7	14	15	36	73	120	209	496

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சத்யமேவ ஜெயதே TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—4

(அறிக்கை பத்தி 4)

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

நாள் (1)	குழுக் கூட்டம் நடைபெற்ற இடம். (2)
29—06—1995	செல்னை.
24—07—1995	திருநெல்வேலி-சுட்டபொம்மன்
25—07—1995	கன்னியாகுமரி
26—07—1995	சிதம்பரானார்
27—07—1975	
28—07—1995	
23—08—1995	புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்.
24—08—1995	
25—08—1995	
11—09—1995	சென்னை
12—09—1995	செங்கை எம்.ஜி.ஆர்.
25—09—1995	நீலகிரி
26—09—1995	கோவை
27—09—1995	பெரியார்
04—10—1995	சென்னை
05—10—1995	
10—10—1995	திண்டுக்கல்-அண்ணா
11—10—1995	மதுரை
12—10—1995	காமராஜர்,
13—10—1995	இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்
25—10—1995	வடஆற்காடு-அம்பேத்கார்
26—10—1995	திருவண்ணாமலை-சம்புவராயர் விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார்.
14—11—1995	நாகை காயிதே-மில்லத்
15—11—1995	தென்னாற்காடு வள்ளலார்
23—11—1995	தர்மபுரி
24—11—1995	சேலம்
13—12—1995	
14—12—1995	சென்னை
15—12—1995	

இணைப்பு—5

நிறைவேற்றப்பெற்ற/படித்துப் பதிவு செய்யப்பெற்ற உறுதிமொழிகள்/சதவீதம்.

வரிசை எண்.	ஆண்டு.	நிலுவையாக உள்ள உறுதிமொழிகளின் எண்ணிக்கை.			நிறைவேற்றப்பெற்ற/படித்துப் பதிவு செய்யப் பெற்ற உறுதிமொழிகள்.		
		ஆண்டுத் தொடக்கத்தில்.	மேலும் சேர்த்துக் கொள்ளப் பட்டவை.	மொத்தம்.	ஆண்டு. இறுதியில்.	எண்ணிக்கை	சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	1989 ..	1,655	721	2,376	1,835	541	28
2	1990 ..	1,825	497	2,332	1,565	767	82.9
3	1991 ..	1,565	375	1,940	1,186	754	38.7
4	1992 ..	1,186	890	2,076	1,041	1,035	49.9
5	1993 ..	1,041	521	1,562	433	1,129	72.3
6	1994 ..	474	318	792	331	461	58
7	1995 ..	347	231	578	496	82	14

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS